**இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை - 2022**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ''சபை'' 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தரும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும்,

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் சபையின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபையின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணஒங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தொடர்பாக இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தகு ஆயுட்காலம் ஆகக் குறைந்தது ஒவ்வொரு நிதி ஆண்டும் மீளாய்வு செய்யப்பட வேண்டியதுடன் வினைத்திறனான ஆயுட்காலம் ஏற்கனவே மதிப்பீடு | சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் மீள்மதிப்பு தொடர்பாக 2024 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சொத்துக்களின் பயன்தகு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டதனை விட மாற்றமடையுமாயின் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 அளவில் முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகின்ற ரூபா 470,023,622 கிரயமான ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்களின் பயன்தகு ஆயுட் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கிணங்க கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2016 ஆம் ஆணடிற்கு முன்பிருந்து காணப்பட்டு வருகின்ற மூலதன மானியத்தின் கீழ் ரூபா 10,500,000 பெறுமதியான Cess Fund எனப்படும் மானியமானது இலங்கை கணக்கீட்டு நியமம் 20 இன் 26 அல்லது 27 ஆம் பந்தியின் பிரகாரம் காலக்கழிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த மானியம் 2024 ஆம் ஆண்டு முதல் காலக்கழிவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் காலக்கழிவு செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் குடியேற்ற கடன்பட்டோர் மீதி ரூபா 22,192,934 ஆக இருந்ததுடன் இதில் ரூபா 2,582,297 ஆன இனங்காணப்படாத பொது மீதியொன்று காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது இவ்வேறுபாடு கண்டறியப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. | மீதிகளைக் கண்டறிந்து சரியாகத் திருத்தங்கள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | 2,722,356 | - | 2,722,356 | தேவையான கணக்கீட்டு திருத்தங்கள் செய்யப்படுதலானது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி மற்றும் நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி சரியாக சீராக்கம் செய்யப்பட |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | வேண்டும். |
| (ஆ) | நன்வமு லங்கா நிகழ்ச்சித்திட்டம | 5,117,669 | - | 5,117,669 | தேவையான கணக்கீட்டு திருத்தங்கள் செய்யப்படுதலானது தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (இ) | குடியேற்ற நிலுவை வாடகை வருமானம் | 22,192,934 | 19,091,044 | 3,101,890 | இந்த ஒவ்வொரு மீதிகளும் உருவாக்கப்பட்ட விதம் ஆராயப்பட்டு சரி செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டில் திருத்தங்கள் செய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) | குடியேற்ற நீர் கட்டண வருமானம் | 7,715,837 | 7,191,834 | 524,002 | அந்தப் பிழைகள் கண்டறியப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளன | - மேற்படி - |
| (உ) | பரிசோதனை கட்டணம் | 683,115 | 1,348,406 | 665,291 | 2023 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டது. | - மேற்படி - |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டிய பணம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பழைய முற்பணக் கொடுப்பனவு மீதியில் 2021 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கான தீர்க்கப்படாத ரூபா 6,050,081 ஆன மீதியொன்று காணப்பட்டது. | 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான பழைய முற்பணக் கொடுப்பனவு தொடர்பான இன்னும் தீர்க்கப்படாத மீதிகள் உள்ளன. | சம்பந்தப்பட்ட பொருட்களைப் பெறுவதற்கு அல்லது பணத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய நடைமுறைச் சொத்துக்களில் 2020 ஆம் ஆண்டு முதல் தீர்க்கப்படாது காணப்பட்ட ரூபா 7,357,288 ஆன 07 மீதிகள் காணப்பட்டதுடன் அவை தீர்க்கப்படுவதற்கு சபை மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதிகளைத் தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 33 வணிகக் கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 12,238,482 மற்றும் 13 ஏனைய கடன்கொடுத்தோர் மீதிகளின் பெறுமதி ரூபா 9,587,167 என்பன 2 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து காணப்பட்டு வருகின்ற மீதிகளாக இருந்தன. | இந்த மீதிகள் தற்போது தீர்க்கப்பட்டுள்ளன. | மீதிகளைத் துரிதமாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2011 திசெம்பர் 12 ஆந் திகதிய 28/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை | 2012 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை பொறியியலாளர் சேவையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்காக மாதாந்தம் ரூபா 15,000 படியினைச் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் இச்சுற்றறிக்கையின் மூலம் படிகளைச் செலுத்துவதற்கு அங்கீகரிக்கப்படாத நிறுவனத்திற்காக படிகளைச் செலுத்துவதாகயிருந்தால் அமைச்சு செயலாளரினூடாக நிதி அமைச்சிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அவ்வாறான அங்கீகாரமின்றி பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 12 உத்தியோகத்தர்களுக்கு 2018 ஆம் ஆண்டிலிருந்து சேவைக் காலத்தினை அடிப்படையாகக் கொள்ளாது முழு | ரூபா 15,000 ஆன பொறியியலாளர் கொடுப்பனவொன்றை செலுத்துவதற்கு பணிப்பாளர்கள் சபையின் சிபாரிசு அமைச்சின் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அந்த அங்கீகாரம் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களின் அங்கீகாரத்தின் பிரகாரம் உரிய படி சபையின் பொறியியலாளர்களுக்குச் செலுத்தப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொடுப்பனவையும் செலுத்தியதன் காரணமாக அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவை விட மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 6,177,000 அதிகமாக செலுத்தப்பட்டது. | | |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டு கைநூலின் 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று நிதியாண்டு முடிவடைந்து அறுபது (60) நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 நவம்பர் 02 ஆம் திகதி அதாவது 08 மாதங்கள் தாமதத்திற்குப் பிறகு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 103,616,824 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 59,318,302 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 44,298,522 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு முன்னைய ஆண்டினை விட மீளாய்வாண்டின் போது விற்பனைக்கிரயம் ரூபா 40,683,991 ஆல் மற்றும் நிர்வாகச் செலவுகள் ரூபா 68,914,484 ஆல் அதிகரித்திருந்த போதிலும் அதனுடன் ஒப்பிடும்போது அரசாங்கத்தின் மீண்டுவரும் மானியம் ரூபா 39,650,000 ஆல், மொத்த வருமானம் ரூபா 101,807,704 ஆல் மற்றும் வங்கி வட்டி வருமானம் ரூபா 9,142,997 ஆல் அதிகரித்திருந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வணிகம் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளில் கடன்பட்டோரிடமிருந்து முன்னைய பெறுவனவுகளாக ரூபா 52,628,070 காட்டப்பட்டிருந்ததுடன் சரியாக நாளதுவரையாக்கப்படாததன் காரணமாக இந்த மீதிகள் உருவானது என்பது கண்டுபிடிக்கப்பட்டது. | தொடர்புடைய அனைத்து தகவல்களும் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. | முறைமை நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விமலசுரேந்திர மின் உற்பத்தி நிலையத்திலிருந்து அகற்றப்பட்ட கண்டி மாவட்ட அலுவலகத்தின் மூலம் 2022 ஆம் ஆணடில் கொள்வனவு செய்யப்பட்ட உடைந்த செம்புகளில் ரூபா 3,754,298 பெறுமதியான உலோகங்கள் சபைக்கு பெறப்படவில்லை. மேலும், அந்தப் பணத்தை மீளப்பெறுவதற்கு அல்லது பொருட்களை பெறுவதற்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | குறிப்பிட்ட பெறுமதியை இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கு வழங்குமாறு அவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை பெறுவதற்கு அல்லது பொருட்களை பெறுவதற்கு நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான மாத்தறை பணிமனைக்கு தேசிய அருங்கலைகள் பேரவையால் ரூபா 3,850,740 பெறுமதியான 3 இயந்திரங்கள் தயாரிப்பதற்கு 2021 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2023 மார்ச் மாதம் கணக்காய்வினால் நடாத்தப்பட்ட சுயாதீன பரிசோதனையில், பிரம்புக் காட்டிலிருந்து இழுப்பதற்கான ரூபா 351,000 பெறுமதியான இயந்திரம் தவிர ஏனைய 2 இயந்திரங்களின் பணி நிறைவடையவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. 2024 ஜனவரி இறுதி வரை இந்த மூன்று இயந்திரங்களின் பணிகள் முடிக்கப்பட்டு அருங்கலைகள் பேரவைக்கு ஒப்படைக்கப்படவில்லை. | அந்த இயந்திரங்கள் முடிக்கப்பட்டு இயன்றளவு விரைவில் வழங்கப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | ஏற்றுக்கொள்ளப்பட்ட பணி கட்டளைகளை முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு சொந்தமான 16 கைத்தொழில் குடியேற்றங்களில் 733 தளப் பகுதிகள் காணப்படுவதுடன் இதில் 52 தளப் பகுதிகள் தொழில்துறையினருக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. மேலும், 05 கைத்தொழில் குடியேற்றங்களில் | சபைக்கு சொந்தமான பிரதான கைத்தொழில் குடியேற்றங்களான ஏகல, பல்லேகல, ஹொரண, பன்னல, பானலுவ போன்ற குடியேற்றங்களில் வெற்று தளப் பகுதிகள் காணப்படவில்லை. 2019 ஆம் ஆண்டில் 02 ஆம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள | தளப் பகுதிகள் தொழில்துறையினருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு மற்றும் ஆக்கபூர்வமான கைத்தொழில்கள் அமைக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 23 காணிகள் தனியார் குடியிருப்புக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 31 இல் குடியேற்றங்களில உள்ள 29 தொழிற்சாலைகள் செயற்படாமல் மூடப்பட்டிருந்ததுடன் அவை ஏனைய தொழில்துறையினருக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நெகம்பஹா மற்றும் அச்சுவேலி தொழிற்துறைக் குடியேற்றங்களில் காணப்பட்ட வெற்று தளப் பகுதிகளின் எண்ணிக்கை 30 ஆகும். கொட்டகலை மற்றும் மிஹிந்தலை குடியேற்றங்களில் 11 வெற்று தளப் பகுதிகள் காணப்படுகின்றன. இந்த தளப் பகுதிகள் புதிய முதலீட்டாளர்களுக்கு கையளிக்கப்படுவதற்கு தேவையான விளம்பர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறியியல் பிரிவின் வேலைத்தளத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 11 ஆண்டுகளுக்கு மேல் பழைமையான பயன்படுத்த முடியாத 34 இயந்திரங்களும் ஏனைய உபகரணங்களும் காணப்பட்டிருந்தம் இப்பொருட்களை பிரிவிலிருந்து அகற்றுவதற்கு அல்லது ஏனைய பொருத்தமான முயற்சிகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே பெரிய துளைகளை சிறியதாக்குதல், சிறிய துளைகளை பெரியதாக்குதல்ககளை, உலோகத் துண்டுகளை வெட்டுதல் முதலிய வெளிச் செயற்பாடுகளுக்காக வேண்டுதல் காணப்பட்ட Boring Machine, Electrical Discharging Machine, Die Sinking Machine மற்றும் Power Hammer for Black Smithy Work ஆகிய 04 இயந்திரங்களில் இயக்குபவர்கள் இல்லாததன் அடிப்படையில் 11 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படபாது காணப்பட்டன. | தொழிற்சாலையிலுள்ள பயன்படுத்தப்படாத 11 ஆண்டுகளுக்கு மேல் பழமையான இயந்திரங்கள் மற்றும் உதிரிபாகங்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் விலை நிர்ணயம் செய்யப்பட்டு ஏலத்தில் விடப்படுவதற்கு மிக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். வேலைத்தளத்தில் காணப்பட்ட Boring Machine, Electrical Discharging Machine என்பவற்றில் தவறொன்று காணப்பட்டதுடன் அதற்குப் பொருத்தமான பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளது. மேலும், அந்த இயந்திரங்களின் பழுதுபார்க்கும் பணிகளை மேற்கொள்வதற்கு பாரியளவு செலவொன்று ஏற்படுவதால் பயிற்சி பெற்ற தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் அந்தளவிற்கு பொருளாதார ரீதியில் பலன் இல்லை. | பயன்படுத்தப்பட முடியாத மற்றும் விளைவற்ற உபகரணங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பேலியகொட இறப்பர் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்திற்கு இறப்பார் சார்ந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், வீணாக்குதலினைக் குறைத்தல், உற்பத்திச் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரித்தலும், உற்பத்திச் செலவினைக் குறைத்தலும், சிறிய மற்றும் மத்திய மட்டத்திலான கைத்தொழில்களுக்கு இந்த இயந்திரங்களை பயன்படுத்துவதனை அறிமுகப்படுத்தலும், ஊக்குவித்தலும் முதலிய குறிக்கோள்களை முன்னிலைப்படுத்தி இறப்பர் இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திரம் 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9,318,026 பணத்திற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. கொள்வனவு செய்த திகதியிலிருந்து 328 பயிலுனர்களுக்கு மாத்திரம் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு முதல் 2023 கணக்காய்வுத் திகதி வரை அந்த இயந்திரம் செயற்பாடற்ற நிலையில் சபையின் பொறியியல் பிரிவின் வேலைத்தளத்தில் வைக்கப்பட்டிருந்தது. | இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி பிரிவில் பொருத்தப்பட்டிருந்த இன்ஜெக்ஷன் மோல்டிங் இயந்திரம் தற்போது தலைமை அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது புதுப்பிக்கப்பட்டு எதிர்காலத்தில் மோட்டார் வாகன உதிரி பாகங்களின் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் | இயந்திரங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய அமப/16/1424/723/039 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அரச பங்களிப்புடன் ரோபோ தொழில் நுட்பத்திற்கான விசேட நிலையமொன்றை நிறுவுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் புதிய தள முன் தயாரிப்பு நிலையம் தெரிவு செய்யப்பட்டிருந்தது. புதிய தள கட்டிடத்தின் 5 அறைகள் கொண்ட தரைத்தளம் மற்றும் இரண்டாம் தளத்தை நிர்மாணித்தல், பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தல் ஆகியவற்றிற்காக ரூபா 40 | ரோபோ தொழில் நுட்பத்திற்கான விசேட நிலையம் எம்மால் மிகப் பொருத்தமான வகையில் நிறுவுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும் இந்த நிலையம் வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ் காணப்பட்டு வந்ததுடன் தற்போது இந்த நிலையத்தின் உரிமை சபைக்கு சொந்தமானதல்ல. ஆனால் இந்த ரோபோ இயந்திரங்களை திருத்தி மேலும் செயற்பட வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எம்மால் எடுக்கப்பட்டு வருகின்றது. | செயற்திட்டம் உடனடியாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு சொத்துக்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மில்லியன் செலவிடப்பட்டது. மேலும், இச்செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 35 மில்லியன் பெறுமதியான ரோபோ தொழிநுட்ப இயந்திரங்கள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் இந்த மையத்தில் நிறுவப்பட்டன. இதனை அமுல்ப்படுத்துவதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட நிறைவேற்று உத்தியோகத்தருக்கு 2017 செப்தெம்பர் மாதத்திலிருந்து 2018 ஒக்தோபர் மாதம் வரை ஒரு மாதத்திற்கு ரூபா 725,000 வீதம் சம்பளமும் படியுமாக ரூபா 11 மில்லியன் அளவில் செலுத்தப்பட்டிருந்தும் தேவையான பதவியணியினரைச் சேர்த்துக்கொள்ளலும் அதன் நடவடிக்கைகளை ஆரம்பித்தலும் இடம்பெற்றிருக்கவில்லை. இது வெற்றியளிக்காமையின் அடிப்படையில் கைத்தொழில் அமைச்சின் கீழ் காணப்பட்ட இந்த நிலையம் 2023 ஆம் ஆண்டின்போது தொழில்நுட்ப அமைச்சின் கீழ் காணப்பட்டதுடன், 2023 ஒக்டோபர் மாதம் நடாத்தப்பட்ட களப் பரிசோதனையின் பிரகாரம் இங்கு நிறுவப்பட்ட 15 வளிப்பதனாக்கிகள் மற்றும் 7200 சதுர அடி பரப்பளவில் நிறுவப்பட்ட இயந்திரங்கள் செயலற்றதாக 06 ஆண்டுகளுக்கும் மேலாக காணப்பட்டன. எவ்வாறாயினும், இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவித்தல், அவற்றை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் நோக்கில் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அது இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

(ஈ) பேலியகொட இறப்பர் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் 64 இறப்பர் சார்ந்த இயந்திரங்கள் காணப்பட்டதுடன் அவற்றில் 26 இயந்திரங்கள் 1 ஆண்டிற்கும் 37 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் அந்த இயந்திரங்களின் செயலற்ற இயந்திர பாகங்கள் மற்றும் உதிரி பாகங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத மூலப்பொருட்களை அப்பிரிவிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு பொருள் மெய்மையாய்வு குழுவிற்கு

பயன்படுத்தப்படாத இயந்திரங்களை பயன்படுத்துவதற்கும் மற்றும் செயற்படாத இயந்திரங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 85.560 ஆன Compressor இயந்திரம் 2017 ஆம் ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் உறைகளில் களஞ்சியத்தில் காணப்பட்டது. மேலும் அதில் காணப்பட்ட 17 வகையான மூலப்பொருட்கள் மற்றும் 284 வகையான இயந்திர உதிரி பாகங்கள் 1-17 ஆண்டுகள் வரையான காலமாக பயன்படுத்தப்படாமல் செயலிழநது காணப்பட்டன. | அனுப்பி ஆலோசனைக் குழுவொன்று நியமிக்கப்பட்டு அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>தற்போது பயன்பாட்டில் உள்ள மிகவும் பழமையான கொம்ப்ரசர் செயலிழந்தால் மாற்றுவதற்கு அதிக நேரம் எடுக்கும் என்பதால், முன்னாள் பிரிவின் பொறியாளர் மற்றும் தலைமை பொறியியல் பணிப்பாளரின் மேற்பார்வை மற்றும் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டது. இந்த இயந்திரம் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன் பின்னர் எதிர்கால பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது. . | |
| (உ) | 2020 ஆம் ஆண்டில யுனிடோ நிறுவனத்தினால் அ.டொ 101,130 பெறுமதியான 12 இயந்திரங்கள் மற்றும் அ.டொ 1167.44 பெறுமதியான பொருட்களும் சபைக்கு வழங்கப்பட்டு அவை லக்சல கட்டிடத்தில் நிறுவப்பட்டு தற்காலிகமாக மூங்கில் மரப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 2022 செப்டெம்பர் மாதத்தில் பயிற்சி நிலைய கட்டிடம் தேசிய அருங்கலைகள் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டதால் அதில் இருந்த இயந்திரங்கள் அகற்றப்பட்டு கட்டுபெத்த புதிய தள வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் வைக்கப்பட்டமையால் 2024 சனவரி வரை அவை பயன்படுத்தப்படாமல் செயலற்றதாக காணப்பட்டன. | இந்த உயர் பயிற்சி நிறுவனம் தேசிய அருங்கலைகள் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டதால், 2023 மே மாதம் கட்டுபெத்த புதிய தள வளாகத்தில் உள்ள கட்டிடத்தில் இயந்திரங்கள் நிரம்பியுள்ளன. இந்த புதிய தள வளாகத்தின் சட்ட உரிமைகள் முழுமையாக எங்கள் நிறுவனத்திற்கு மாற்றப்படாததுடன் அதற்காக இதுவரை வழக்குப்பதிவு செய்யப்படாத காரணத்தினால் அதிலுள்ள கட்டடம் சீரமைக்கப்பட்டு இயந்திரங்கள் பொருத்துவதில் தாமதமொன்று ஏற்பட்டது.<br><br>எனினும், அடுத்த சில நாட்களில் அதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு இயந்திரங்களை நிறுவப்பட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் நோக்கங்களை விரைவாக அடைவதற்கும், சொத்துக்களை திறம்பட பயன்படுத்துவதற்கும், பயிற்சி நிலையத்தினை உடனடியாக தொடங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |